# அமரிக்கையாய் இருப்பது எப்படி!

**லில்லியன் ஸ்டான்லி**

சும்மா இருப்பதா? ஆஹா, கூடாத காரியம். வேலை கொடுத்தால் குடுகுடுவென்று ஓடுவோம். சும்மா இருக்கச் சொன்னால் இருக்கையில் நெளிவோம். ஆனால் சில வேளைகளில் நமது வாழ்க்கையில் சர்வேஸ்வரர் நம்மைச் சும்மா இருக்கச் சொல்லுகிறார். நமது உதவியின்றி உன்னதர் தன் கைத்திறனைக் காட்ட விரும்புகிறார். வேலை செய்வதைக் காட்டிலும், சும்மா இருப்பதற்கு அதிக கெட்டிக் காரத்தனம் அவசியம். இந்தத் திறனை வளர்த்துக் கொள்ளுவது எப்படி?

## 1. மகேஸ்வரனது மகத்துவத்தை தியானியுங்கள்

நமக்குத் தொடை நடுங்குவதற்குக் காரணமே இறைவனது வல்லமையை புரிந்துகொள்ளாததுதான். கவலைப்படாதிருக்க இயேசு கற்பித்தார். படபடக்கும்போது நடைபயிலச் சென்று காட்டுப்பூக்களையும், குருவிகளையும் வேடிக்கை பார்க்கச் சொன்னார் இயேசு. பராபரன் பெரியவர், நீங்கள் பயப்பட வேண்டாம் என்று அவை உங்களுக்குப் பாடம் புகட்டும் (மத் 6:25-34). ஆபிரகாமை ஆண்டவர் கேட்டார், “கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?” சந்தேகப்பட்ட எரேமியாவிடம் கேட்டார், “என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?” (எரே 32:27). இரண்டுமுறை வினவிவிட்டு அதிசயமானவர் இரண்டுமுறை புதிய ஏற்பாட்டில் விடை கூறுகிறார்: “தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை” (மத் 19:26; லூக் 1:37). உன்னதமானவரை எவ்வளவு பெரியவராகப் பார்க்கிறோமோ அவ்வளவு விஸ்தாரமாயிருக்கும் நமது விசுவாசம். மாமன்னரின் வல்லமையையும் சக்தியையும் விவரிக்கும் அவரது குணாதிசயங்கள் பலவுண்டு. அவற்றை



அசைபோடும்போது நமது படபடப்பு அடங்கிவிடும். “கறந்த பாலையும் காகம் குடிக்காது கட்டபொம்மன் துரைப் பேரைச் சொன்னால்,” என்பார்கள். அண்டசராசரங்களை ஆளுபவரது பெயரை தியானித்தால் பயமென்னும் கார்மேகம் கரைந்தே போய்விடும்.

## 2. பதற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துங்கள்

சிவந்த சமுத்திரத்தின் கரையில் இஸ்ரவேலரை எகிப்திய சேனை துரத்திவந்தபோது அவர்கள் அரண்டுபோயினர். கடவுளைக் கூப்பிட்டாலும், வனாந்தரத்தில் சாகடிக்கக் கொண்டுவந்தததாக மோசேயைக் குற்றஞ்சாட்டினர். “நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலைசெய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா?” என்றனர். அந்தச் சூழலில் நாமும் அப்படித்தான் புலம்பியிருப்போம். மோசேயோ அணுச் சஞ்சலமுமின்றி அவர்களை அமைதிப்படுத்தி, “பயப்படா திருங்கள்; நீங்கள் **நின்றுகொண்டு** இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்... கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் **சும்மாயிருப்பீர்கள்**,” என்றார் (யாத் 14:10-14). விட்டிருந்தால் எகிப்தியர் காலில் விழுந்து தங்களை திரும்பக் கொண்டுபோகும்படி கெஞ்சி யிருப்பர்.

சூழ்நிலை நெருக்கடியில் நாம் அடாவடித்தனமாக ஏதாவது செய்துவிட்டு பின்பு வருந்துவோம். அடாது செய்வோர் படாதுபடுவர். ஞானம் பிந்திதானே உதிக்கிறது. நாம் வாளாவிருக்கவேண்டும் என்பதல்ல; ஆண்டவ ருடையத் தெளிவான வழிநடத்துதலுக்குக் காத்திருக்க வேண்டும். அவசரக் குடுக்கைகள் போல எதையாவது செய்து சூழ்நிலையை மோசமாக்கி வாழ்க்கையைப் பாதிப்புக் குள்ளாக்கிவிடக்கூடாது. நமது பெலன் அங்குமிங்கும் ஓடி அதையுமிதையும் செய்வதிலில்லை; அமர்ந்த நம்பிக்கையில்

தான் இருக்கிறது. "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா 28:16). தேவன் நம்பக்கூடியவர்!

சிரியாவின் அரசன் இஸ்ரவேலோடு யுத்தம் செய்ய வந்தான். ஆனால் எலிசாவின் ஆலோசனையினால் எதிரியின் திட்டங்களை அறிந்து இஸ்ரவேல் அரசன் தப்பித்துக் கொள்வான். இதையறிந்த சிரியா அரசன், தோத்தானை சுற்றி வளைத்து எலிசாவைப் பிடித்து வரும்படி பெரிய படையை அனுப்பினான். எலிசாவின் ஜெபத்தினால் அவர்கள் குருட் டாட்டமானார்கள். "வழி இங்கே" என்று சொல்லி எலிசா அவர்களை சமாரியாவிற்கு அழைத்துச் சென்று அவர்கள் கண்களைத் திறந்தார். இஸ்ரவேல் அரசன் அவசரமாக அவர்களைக் கொல்லத் திட்டமிட்டபோது, எலிசா அவர் களுக்குப் பந்தி பரிமாறும்படிச் சொன்னார். திருப்தியாய் விருந்துண்டு சென்ற அவர்கள் திரும்ப இஸ்ரவேலோடு சண்டையிட வரவேயில்லை. 2 இராஜாக்கள் 6:8-23இல் இந்த சுவாரஸ்யமான நிகழ்வை வாசியுங்கள். எலிசா குறுக்கிட்டிரா விடில் அரசர் மதியீனமாய் செயல்பட்டிருப்பார். சத்துருவைத் தோற்கடிக்க பிரமாதமான யோசனையல்லவா! யாக்கோபும் யோவானும் வானத்திலிருந்து அக்கினியை இறக்கி மக்களைக் கொல்ல நினைத்தனர். பேதுரு மல்குஸின் காதை வெட்டினார். இயேசு அவர்களது பதற்றத்தைக் கண்டித்தார் (லூக் 9:54; யோவா 18:10).

### 3. மூளையைத் திருகிவிடுங்கள்

கருகலான சூழ்நிலையில் திடீர் முடிவெடுக்காமல், ஆலோசனைக் கர்த்தர் வழிநடத்தக் காத்திருந்து யோசி யுங்கள். விதி விளையாடினாலும் மதி வென்றுவிடும். தாவீது ஞானமாய் செயல்பட்டவர் என்றறிவோம். அவர் சொல்கிறார், "நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ் செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு **அமர்ந்திருங்கள்**" (சங் 4:4). தானே இதை நடைமுறைப்



படுத்தும்போதெல்லாம், பரமன் அவரது பழிவாங்கும் எண்ணத்தைப் பதப்படுத்தி கோர வார்த்தைகளைக் குயிலின் பாடலாக மாற்றியிருப்பார் என்று எண்ணுகிறேன்.

நகோமி மற்றொரு புத்திசாலி. போவாசிடம் காரியத்தைச் சொல்ல ரூத்தை ஊக்குவித்துவிட்டு அவளிடம், "என் மகளே, இந்தக் காரியம் என்னமாய் முடியுமென்று நீ அறியுமட்டும் **பொறுத்திரு;** அந்த மனிதன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமட்டும் இளைப்பாற மாட்டான்" என்றாள் (ரூத் 3:18). படுக்கையில் நகோமிக்குத் தனது மருமகளின் விதவை நிலை நெஞ்சை அழுத்தியிருக்கும் என்பது திண்ணம். நிச்சயமாக நித்தியப் பிதா அவளது எண்ணங்களையும் திட்டங்களையும் நடத்தினார். நெகேமியாவின் மனதிலே கர்த்தர் ஒரு எண்ணத்தை வைத்தார் (நெகே 2:12; 7:5).

அப்படியாக, அமைதியான நேரங்களில் ஆண்டவரோடு பேசிக்கொண்டிருங்கள். அவருடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூருங்கள். 2000 ஆண்டுகளுக்கு முன் தன் பிள்ளை களோடு பேசின இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றென்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி 13:8). அவர் வழிநடத்துவார், வாசல்கள் திறக்கும்.

### 4. இயற்கையாய் நடந்துகொள்ளுங்கள்

எதுவும் நடவாததுபோல வாழ்க்கையைத் தொடருங்கள். உங்கள் முதுகுக்குப் பின் ஏதோ சதி நடப்பதுபோல் தெரியும் போது வல்லவர் சும்மா இரு என்கிறார் என வைத்துக் கொள்வோம். உங்களை முதுகில் குத்தவிருக்கும் நபருடன் சகஜமாகப் பழகுவது சாத்தியமா? கடித்துக் குதறலாம்போல் தோன்றுமல்லவா? இது நடிப்பதோ மாய்மாலமோ அல்ல, சுயக் கட்டுப்பாடும் நித்திய நாதர் மேலுள்ள நம்பிக்கையுமேயாம்.

"அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்க்கிறார்." அங்கே அமர்ந்து இளைப்பாறுங்கள். உங்கள் மேய்ப்பர்

உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார். பதற வேண்டியதில்லை. “அவர் என்னை **அமர்ந்த** தண்ணீர்கள் அண்டையில் கொண்டுபோய் விடுகிறார்.” உங்கள் சூழ்நிலை களையும் அமரச் செய்கிறார். உங்கள் எதிரிகள் பார்த்துக் கொண்டிருக்க நீங்கள் விருந்து சாப்பிடுவீர்களாம்! (சங் 23).

முகத்தைச் சுளிக்காமல் யோசேப்பு தன் சகோதரருக்கு உணவு பரிமாறுவதைக் கற்பனை செய்யமுடிகிறதா? (ஆதி 43:34). அவனது நெஞ்சத்திலிருந்த நிலநடுக்கத்தை சற்றும் உணராமல் அவனோடு கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந் தனர். சர்வேசுவரர் செய்வதைச் செய்யட்டும் என்று சும்மா யிருந்ததற்கு யோசேப்பே முத்தான எடுத்துக்காட்டு.

### 5. ஜெபியுங்கள்

சும்மாயிருப்பதற்கு சர்வவல்லவரின் உதவி தேவை. ஒன்றைச் செய்வதைவிட அது கடினம். சும்மாயிருப்பதற்கான பெலனும், தைரியமும், ஞானமும் அருள வல்ல பிதாவிடம் வேண்டுங்கள். அந்த சூழ்நிலைக்காய் ஜெபியுங்கள். தான் செய்யப்போவதை நண்பன் ஆபிரகாமுக்கு மறைக்க ஆண்டவர் விரும்பவில்லை. எனவே, “அடேய் அபி, சோதோம் கொமோராவை அழிக்கிற அளவுக்கு அங்கு என்னதான் நடக்கிறது என்று பார்க்கப் போகிறேன்” என்றார். லோத்துவை நினைத்து ஆபிரகாமுக்கு திக் என்றது. என்ன செய்தார்? எல்லாம் வல்ல இறைவனுக்கு முன்பாக எலும்பற்றவரானார். எனவே ஜெபித்தார், கெஞ்சினார், வாதாடினார். பேரம் பேசி முடிந்தது. “ஆபிரகாம் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினார்” (ஆதி 18:17-33).

இரவெல்லாம் கொட்டு கொட்டென்று விழித்திருந்த ஆபிரகாம் விடியற்காலமே எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போனார். சோதோம் கொமோராவிற்கு மேலிருந்து அகமதாபாத்தில் ஏர் இண்டியா போயிங் விமானம்



விழுந்தது போல குப்பென்று தீயும் புகையும்! (ஆதி 19:27,28). “அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும் போது, தேவன் ஆபிரகாமை **நினைத்து**, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப் போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பி விட்டார்!” (வச 29).

அல்லேலூயா என்று குதிக்கத்தோன்றவில்லையா! ஜெபத்தைக் கேட்கிறவர் உங்கள் ஜெபத்தை மறந்துவிட மாட்டார். உன்னதரிடம் மல்லுக்கட்டியபோது லோத்தைக் குறித்து ஆபிரகாம் பேசவில்லை. அருள்நாதர் அவரது இருதயத்தை ஊடுருவிப் பார்த்தார். ஆண்டவர் அமைதியாக, “ஹூம், சரி, சரி” என்று சொல்லிவிட்டு இடத்தைவிட்டு நகர்ந்தார். கொர்நேலியுவின் ஜெபங்கள் தேவனுக்கு நினைப் பூட்டுதலாக அவர் சந்நிதிக்குச் சென்றன (அப் 10:4). அருமை யானவரே, தைரியமாயிருங்கள்; அவர் பெயரே ஜெபத்தைக் கேட்கிறவர்தானே! (சங் 65:2).

### 6. உங்கள் சிக்கலோடு ஒவ்வொருவரிடமாய்ப் போகாதீர்கள்

எல்லோரும் பரிசுத்தவான்களல்ல. தேவையானால் உங்களுக்காக ஜெபித்து, ஆலோசனை கொடுத்து, உதவி செய்யக்கூடிய பக்தியான மூத்த தம்பதியர் ஒருவரிடம் மனம் திறந்து பேசுங்கள். முட்டாளின் இருதயம் அவன் வாயில் இருக்கிறது. தாவீதின் ஒரே நம்பிக்கையான நண்பன் யோனத்தான். தாவீதின் நன்மையை நாடி அவனது இறுதி நாட்கள் வரை, சுவிங்கம் போல அவனோடு ஒட்டி இருந்தவன் (1 சாமு 20:1,2). அன்னாள் ஞானவதி, நேரே அருள்நாதரிடம் சென்று இதயத்தை ஊற்றினாள். அதன்பிறகு அவள் வாடி யிருக்கவில்லை. அவள் சும்மாயிருந்து அவரே தேவனென்று அறிந்துகொண்டாள். ஒன்றுசேர்ந்த கூட்டு இராணுவம் படையெடுத்து வந்தபோது யோசபாத் நடுங்கிப் போனான்.

தானும் உடனே கூட்டுச் சேர்க்கத் திட்டமிடவில்லை. “இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை; நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது,” என்று சேனைகளின் கர்த்தரிடம் மட்டுமே புலம்பினான் (2 நாளா 20:12). பராக்கிரமசாலி பதிலளித்தார், “இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்களல்ல; நீங்கள் **தரித்துநின்று** கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்” (வச 17).

ஞானமின்றி நம்பிக்கையற்றவரிடம் வாய்விடுவீர்களானால் சரிசெய்யமுடியாத பாதிப்பு ஏற்படலாம். அதன் பலனை அனுபவித்துத்தான் தீரணும். இயேசுவின் தாயாகிய மரியாளைப் போல காரியங்களை இதயத்தில் வைக்கப் பழகுங்கள்.

## 7. பொறுமையாயிருங்கள்

ஆண்டவருடைய கடிகாரக் கரங்கள் வேறுவிதமாய்ச் சுழலும். அவரது நாள்காட்டி மெதுவாகவே திரும்பும். “அதிசயமானவரே, அற்புதமானவரே” என்று பாடுகிறோம்; நடப்பதோ வேறு. பொறுமையின்றி படபடத்து முட்டாள்தனமாக எதையாவது செய்து முக்காடிட வேண்டிய நிலையாகிறது. இதுதான் சாராள் செய்தது. சாராளை ஆபிரகாம் ஒருநாளும் மலடி என்று குற்றஞ்சாட்டவில்லை. “நான்” பிள்ளையற்றவனாயிருக்கிறேன் என்றுதான் சொன்னார். “நான் பிள்ளைபெறாதபடிக்கு கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்,” என்று சாராள்தான் சொன்னாள் (ஆதி 16:2). எனவே அவள்மேல் எந்த அழுத்தமுமில்லை. இருப்பினும் கர்த்தரின் கடிகாரம் சுழலவோ நாட்காட்டி திரும்பவோ அவள் காத்திருக்கவில்லை. அவளது அலாரம் அடித்தவுடனே, ‘வேளை வந்தது’ என்று தீர்மானித்துவிட்டாள். என்னே மடமை! உங்கள் வாழ்வில் நீங்களும்



இப்படிச் செய்து தலைகுனிந்த வேளைகள் உண்டோ? கவலை வேண்டாம். நல்ல பாடம் கற்றுக்கொண்டீர்கள்; இனி செய்யாதீர். காலத்தைக் கடந்தவரின் அலாரம் அடிக்கலாம், அடிக்காமலும் போகலாம். ஆனால் உங்கள் சூழ்நிலையை என்ன செய்ய வேண்டுமென்று அவருக்குத் தெரியும்.

பாபிலோனியப் படையெடுப்புக்குத் தப்பி எகிப்திற்கு ஓடிப்போக நினைத்த யூதரிடம் அருள்நாதர், “நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்,” என்றார். அவர்களோ, “குதிரைகளின்மேல் ஏறி ஓடிப்போவோம்,” என்றனர். “சரி, ஓடுங்கள்,” என்று விட்டுவிட்டார் (ஏசா 30:15,16). பிடிவாதமாய் இறைச்சித்தத்திற்கு விரோதமாய்ப் போவோமானால், அவர் கைகழுவி விடுவார். நாம் தலையை சுவற்றில் முட்டிக்கொண்டு, வருந்தி, திரும்பி வருவோம். மனிதத் திட்டங்கள், மண்குதிரைகள்தானே. ஆகவே பொறுத்திருங்கள். இறைவாக்கினர் முடிவாக, “அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்,” என்கிறார் (வச 18).

கர்த்தருடைய சித்தத்தை அறிய அமர்ந்திருக்கும் கட்டுப்பாட்டைக் கற்று, கவனமாய் வாழ்க்கையைத் தொடருங்கள். மக்களைத் தீர்க்கன் ஏசாயா அந்தரத்தில் விட்டுவிடவில்லை. “நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்,” என்றார் (ஏசா 30:21). இறைவார்த்தை நமது கரங்களில் உண்டு. அதை நம் இதயத்தில் ஏற்றினால், அமர்ந்திருக்கக் கற்றுக்கொண்டு, வழிநடத்தும் வல்லவரின் வார்த்தைகளைக் கேட்போம். நமோ, நமோ!

**“நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்”** (சங்கீதம் 46:10).